



# Voice of Jagadguru


advaitam paramanandam

an e-magazine on advaita





## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)




## ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் 73வது வர்த்தந்தி மஹோத்ஸவம் சிறப்பு இதழ்

ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள்,
ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள்
அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறோம்



# Voice of Jagadguru

advaitam paramanandam — an e-magazine on advaita



## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

## ஸ்ரீ ஆச்சார்யாளின் அம்ருத உபதேசங்கள்



மனிதன், தான் எப்பொழுதும் ஸந்தோஷமாக வாழ வேண்டும் என்று எண்ணுவது நியாயந்தான். ஆனால் காலமும் சூழ்நிலையும் மனிதனுக்கு எப்பொழுதும் ஸாதகமாக இருக்காது. ஆகையால், மனிதன் தன்னுடைய வாழ்க்கையில் நடக்கிற ஸம்பவங்களை வைத்தே வாழ்க்கையின் போக்கை புரிந்துகொள்ளவேண்டும்.

நேற்று இருந்தது இன்று இல்லாமலும் இன்று இருப்பது நாளை இல்லாமலும் போய்விடுகிறது. ஒரு பிறந்தநாள் கொண்டாடினால் நம்முடைய ஆயுளில் ஒரு வருடம் குறைந்து விடுகிறது. பால்யம் போய் கிழட்டுத்தனம் சீக்கிரத்திலேயே வந்துவிடுகிறது. ஆகையால், துக்கம் நேரிடும்பொழுது ஒரேயடியாக துக்கப்படக்கூடாது. துக்கப்படுவதனால் பயன் ஏதும் இருக்காது. சரீரமும் தளர்ந்து போய்விடும். சத்ருக்களும் கொண்டாட ஆரம்பித்துவிடுவார்கள். ஆகையால் மனதை துக்கப்படுத்திக் கொள்ளாதே என்று கூறுகிறது சாஸ்த்ரம்.

अनवाप्य च शोकेन शरीरं चोपतप्यते। अमित्राश्च प्रहृष्यन्ति मा स्म शोके मनः वृथाः ।।

அனவாப்ய ச ஶோகேன ஶரீரம்' சோபதப்யதே |அமித்ராஶ்ச ப்ரஹ்ரு'ஷ்யந்தி மா ஸ்ம ஶோகே மன: வ்ரு'தா2: || என்று. வாழ்க்கையில் ஸுகம், துக்கம், லாபம், நஷ்டம், ஜனனம், மரணம் எல்லாம் கிரமத்தில் வந்து போய்க்கொண்டேதான் இருக்கும். ஒரு தீரன் இதையெல்லாம் புரிந்துகொண்டு அதிக துக்கப்படவோ அல்லது அதிக ஸந்தோஷப்படவோமாட்டான். மாற்றங்கள் ப்ரக்குதி நியமம் என்று அறிந்துகொள்வான்.

सुखं च दुःखं च भवाभवौ च, लाभालाभौ मरणं जीवित च । पर्यापरा: सर्वमेते स्पृशन्ति, तस्माद्धिरो न च हृष्येन्न शोचेत् ।।

ஸுக2ம்' ச து3:க2ம்' ச ப4வாப4வெள ச, லாபா4லாபெள4 மரணம்' ஜீவித ச .
பர்யாபரா: ஸர்வமேதே ஸ்ப்ரு'ஶந்தி, தஸ்மாத்3தி4ரோ ந ச ஹ்ரு'ஷ்யேன்ன ஶோசேத் ..

இதை நன்றாக மனதில் பதிய வைத்துக்கொண்டு, கிடைத்ததில் ஸந்தோஷமடைந்து வாழ்க்கையை நடத்திவர வேண்டுமென்று நாம் அனைவரையும் ஆசீர்வதிக்கிறோம்.

(தக்ஷிணாம்னாய சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ மஹாசந்நிதானம் ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள்)

ஸத் ஸம்ப்ரதாயம்
An Unit of the e magazine Voice of Jagadguru)

## சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ மஹா ஸந்நிதானம் அவர்களது உபதேசம் (பெங்களூரில் 1983)



அநேகம் பேர் அனுபவத்திலே, ஸ்வாமிகளே நான் ஈஸ்வர பூஜை எல்லாம் செய்கிறேன், மனது லயிக்க மாட்டேன் என்கிறது என்பார்கள், ஏன் லயிக்க (நிற்க) மாட்டேன் என்கிறது? அவன் வருகிறானே அவனுக்கு என்ன ஜவாப் சொல்லனும், இவனுக்கு என்ன சொல்ல வேண்டும். அங்கு ரூபாய் வைத்திருக்கிறேனே அது என்ன ஆகிறதோ. அவன் ரூபாய் கொடுக்க வேண்டி இருக்கிறதே. அவன் எப்போது கொடுப்பான்? இதுதான் பூஜையின்போது யோஜனை. அப்போது மனது எப்படி நிற்கும். எப்போது இவற்றையெல்லாம் விடுகிறோமோ அப்போது மனதிலே வேறு எந்த விஷயமும் வருவது இல்லை. கேவலம் ஈச்வரனுடைய ஸ்வரூபம்தான் மனதிலே இருக்கும்.

அதனால் யார் ஆசையை விட்டுவிடுவார்களோ, அவர்களுக்கு ஈசுவரனை தியானிக்கவோ, உபாசிக்கவோ அவர்களுக்கு மிகவும் சௌகர்யம் ஏற்படும். தாராளமான அவகாசம் ஏற்படும். நாம் எல்லோரும் இந்த வியவகாரத்தையெல்லாம் வைத்துக்கொண்டு ஈஸ்வர ஸாக்ஷாத்காரம் கிடைத்தால் ரொம்பவும் ஸந்தோஷம் எதிர்பார்க்கிறோம். நம்முடைய திருஷ்டி இப்படி இருக்கிறது. வியவகாரத்திற்கு இடைஞ்சல் ஒன்றும் ஏற்படாது.

அதெல்லாம் செய்து கொண்டிருப்போம், ஆனால் ஈஸ்வர ஸாக்ஷாத்காரம் வரவேண்டும்.

ஒரு இடத்திலே சாஸ்திரத்திலே சொல்லுவார். இந்த வியவகாரத்தையெல்லாம் வைத்துக்கொண்டு சரீர பூஷணம் செய்து கொள்ளாமல், ஆனாலும் ஆத்ம ஸாக்ஷாத்காரம் கிடைக்க வேண்டுமென்று யார் இருப்பானோ, அவன் எப்பேர்பட்ட மனுஷன் என்று கேட்டால், ஒரு நதியைத் தாண்டவேண்டும், நதியைத் தாண்டவேண்டுமென்றால் ஒரு தோணி வேண்டும். அங்கே தோணி இல்லை. ஒரு முதலை இருக்கு. அது மேலே உட்கார்ந்து விட்டான். ஆனால், அது அக்கரைக்கு நீந்திக்கொண்டு போகும் அல்லவா. சுகமாக போய்விடலாம். ஆனால் என்ன ஆயிற்று? அந்த முதலை அவனையே "பக்"கென்று சாப்பிட்டு விட்டது.



அதேபோல் லௌகீகமான வியவகாரத்திலேயே ஆத்ம சிந்தனை செய்கிறேன்; ஆத்ம ஸாக்ஷாத்காரம் வேண்டும் என்று யார் ஆசைப்படுகிறார்களோ அவர்களுக்கு அந்த ஆசை நிஷ்ப்ரயோஜன மான ஆசை, அது என்ன ஆகுமென்று கேட்டால் கேவலம் ஜனங்களை ஏமாற்றின மாதிரி ஆகுமே ஒழிய ஆத்மார்த்தம் என்பது ஒன்றும் இருக்காது.

பகவான் கீதையிலும் மற்ற கிரந்தங்களிலும் இந்த மார்க்கத்தை வெகு ஸ்பஷ்டமாக சொல்லியிருக்கிறார். அனுஷ்டிக்க வேண்டியது ஒன்றுதான் நம்முடைய கடமை. சொன்ன காரியமெல்லாம் சொன்னபடி செய்தாகி விட்டது. ஆனால் இந்த காலத்தில் நமக்கு வந்திருக்கின்ற சமஸ்தை என்னவென்று கேட்டால், நமக்கு சாஸ்திரத்தில் சொன்னதை செய்ய வேண்டும் என்கிற தீவிரம் மனதிலே இல்லை. முதலில் ஒரு பெரியவர் யாரையாவது குருவாக வைத்துக் கொண்டு இருக்கிறோமோ, அவர் சாஸ்திர ஸித்தாந்தத்தைச் சொன்னால், அதை செய்ய வேண்டும். என்கிற பாவமும் மனதிலே இல்லை. செய்ய வேண்டும் என்கிற பாவம் மனதிலே இல்லா விட்டால், இத்தனை பேர் ஏன் உபந்யாஸத்திற்கு வருகிறார்கள் என்று கேட்டால், ஸ்வாமிகள் உபந்யாஸம் எப்படி சொல்கிறார் என்பதைத் தெரிந்து கொள்வதற்காக. ஏனென்றால் உபந்யாஸம் முடிந்த பிறகு, நிறைய பேர் சொல்லுவார் - ஸ்வாமிகளே! ரொம்ப நன்றாக பேசினீர்கள் என்று. நான் அநேகம்

ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

பேருக்குச் சொன்னேன்- நான் நன்றாக பேசினேன் பேசவில்லை என்ற சர்டிபிகேட் தேவையில்லை.



நான் சொன்ன விஷயத்தை ஏதாவது மனதிலே நிறுத்திக் கொண்டீர்களா? அதில் எதையாவது அனுஷ்டானம் செய்ய முடியும் என்கிற தீர்மானத்திற்கு வந்தீர்களா என்று சொல்லுங்கள். மிகுந்த சந்தோஷமாகும். நீங்கள் சொன்னதை மனதிலே நிறுத்திக் கொண்டேன். அதை அனுஷ்டானத்திற்கு கொண்டு வரப் பார்க்கிறேன் என்று சொன்னால், பரம சந்தோஷம். அதை விட்டுவிட்டு, ரொம்பவும் / நன்றாகப் பேசினீர்கள். தமிழ் நன்றாகப் பேசுகிறீர்களே! பேசுகிறீர்கள்; இந்தக் கேள்வி எனக்குத் தேவையில்லை. அப்படிக் கேட்டால் எனக்கு பிடிக்கவும் பிடிக்காது.

ஆனால், யாராவது, பகவான் கீதையில் சொன்னபடி, இத்தனை பேரில் ஒருவராவது, ஆச்சார்யாள் சொன்னதை, தான் அனுஷ்டானத்திற்கு கொண்டு வரனும் என்கிற அபிப்ராயத்திற்கு வந்தால், உண்மையில் அவன் ஸௌக்கியமான மனிதன். அவன் ஸ்துப்பிரியமான மனிதன். அவன் கண்ணியமான மனிதன்.

நாம் ஜீவிதத்திலே ஆத்யந்தமான சுகங்களை அபேக்ஷிக்கிறோம். அது கேவலம் ஈச்வரானுக்கிரஹத்தினால், ஈச்வர ஸாக்ஷாத்காரத்தினால் ஏற்படும். வேறு எதுவும் இல்லை. அப்பேற்பட்ட ஈச்வர ஸாக்ஷாத்காரம் கிடைக்கிறதாக இருந்தால் நாம் பிரபஞ்சத்தில் ஆசையை விட்டு விட்டு, ஆத்ம சிந்தனைக்கு, முயற்சி செய்ய வேண்டும். ஆனால் நாமெல்லோரும், பிரபஞ்சத்தை விட்டு விட்டு, ஆத்ம சிந்தனைக்கு உட்கார வேண்டும் என்று சொன்னால், எல்லோரையும் கர்தவ்ய பாஷ்ட்ராளாக செய்கிறேன் என்று நினைக்கக் கூடாது. கர்த்தவ்யத்தை நிர்வகித்து விட்டு, பின்னர் நமது ஆத்மார்த்தத்திற்கு வேண்டிய வழியை பார்த்துக் கொள்ள வேண்டும்.

ஆனால் கர்த்தவ்யத்தை நிர்வகித்து விட்டு என்று சொன்னால், மறுபடியும் தகராறு ஏற்படுகிறது. எதனுடைய கர்த்தவ்யம்? பையனுக்கு. பேரனுக்கு, கொள்ளுப்பேரனுக்கு கல்யாணம் இவை எல்லாம் நாம் கர்த்தவ்யம் என்று நினைக்கிறோம். நியாயமாக இவ்வளவும் நமது கர்த்தவ்யம் அல்ல. நமக்கு புத்திரன் இருக்கிறான். அவனுக்கு கல்யாணம் செய்து வைத்து விட்டால் நம்

ஸத் ஸம்ப்ரதாயம்
An Unit of the e magazine Voice of Jagadguru)

கர்த்தவ்யம் தீர்ந்து விட்டது. ஆனால் நாமாகவே இல்லாத கர்த்தவ்யங்களை எல்லாம் உண்டாக்கிக் கொள்கிறோம். இதை மனதில் கொண்டு என்னுடைய கர்த்தவ்யம் இன்னும் முடியவில்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். ஆனால் வாஸ்தவமாய் நம்முடைய கர்த்தவ்யம் அதுவரைதான் இருக்கிறது. அதனால் அந்த கர்த்தவ்யத்தை செய்தாகி விட்டது என்று. சொன்னால், இனி அடுத்த விசயத்திற்கு நாம் சிந்தனை செய்யப் போகக் கூடாது. சிந்தனை செய்தால் அதற்கு அர்த்தம் இல்லை.




நான் முதலில் சொன்னேன். ஒரு ரூபாய்க்காரன் ரூ.10க்கும். ரூ.10க்கு உடையவன் ரூ. 100க்கும், ரூ.100க்கு உடையவன். ரூ.1000க்கும், ஆசைப் பட்டுக் கொண்டிருப்பான். ஏதாவது ஒரு இடத்திலே, ஆசை என்பது நிற்க வேண்டாமா? அதற்கு அபவிஷயம் என்பது இது. ஈச்வர அனுக்ரஹத்தால் புத்திரன் ஏற்பட்டால், அந்த புத்திரனுக்கு ஒரு நல்ல வழியை உண்டாக்கி விட்டால் தீர்ந்தது. இனி அந்தக் குழந்தைக்கு குழந்தை பிறக்கவில்லை. அதுக்கு பேச்சு வரவில்லை. அதுக்கு நடக்க வரவில்லை. அதுக்கு சரியாக படிக்க வரவில்லை. இப்படியே நாம் சிந்திக்க ஆரம்பித்தால், அதற்கு அர்த்தம் இல்லை. அதனால் யாரையும் கர்த்தவ்ய பாஷ்ட்ராளாக நான் சொல்லவில்லை. தங்களுடைய கர்த்தவ்யத்தை எவ்வளவு செய்ய வேண்டும் என்று சொல்லி இருக்கிறோமோ அவ்வளவு செய்து விட்டு, இனி நான் ஆத்ம ஸாக்ஷாத்காரத்திற்கு வேண்டிய வழியைப் பார்த்துக் கொண்டால் அது ரொம்பவும் உத்தமமான ஒரு சந்நிவேசம். அதற்கு எல்லோருக்கும் பகவான் அனுக்ரஹம் செய்யனும்.

நாம் வ்யவஹாரத்தில் அத்யந்த ஈடுபாடு கொள்ளக்கூடாது. அப்படி ஈடுபாடு இருந்தால் மனத்திலே ஈச்வர சிந்தனைக்கு அவகாசமே இருக்காது. எவ்வளவுக்கெவ்வளவு வியவஹாரங்களை அதிகமாக்கிக் கொள்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு ஈச்வர சிந்தனையில் விலகிக் கொண்டு போவோம். ஆனால் வியவ ஹாரத்தில் இருக்கும் போது நமக்கு உள்ள த்வேஷங்களோ, காமக்ரோதங்களோ நம்மை அதிகமாக வ்யவஹாரத்துக்குள் இழுத்துக் கொண்டே போகும்.

## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)




ஒருவன் நம்மை ஒரு வார்த்தை சொல்லி விட்டான் என்றால் அதை ரொம்பவும் ப்ரமாதமாக்கிக் கொள்வோம். ஒருவன் நம்மிடம் ஒரு சிறிய வார்த்தை பேசி விட்டான் என்று சொன்னால் அது மிகவும் பிராமதமாகிறது. நமக்கு கொஞ்சம் தெய்வ சம்பத்து இருந்தால், நாம் எப்படி இருக்க வேண்டும் என்று சொன்னால், பகவான் கீதையில் சொன்னார். நாம் எல்லோரும் கீதையைப் படித்துக் கொண்டிருக்கிறோம். அவன் திட்டினால் உனக்கு என்ன? அவன் புகழ்ந்தால் உனக்கு என்ன? அவன் திட்டினான் என்பதற்காக அவனிடம் வியவஹாரத்துக்கு போகவும் வேண்டாம். அவன் புகழ்ந்தான் என்பதற்காக அவனைக் கட்டிக் கொள்ளவும் வேண்டாம். இரண்டும் வேண்டாம். வேண்டியதுதான். இரண்டுக்கும் மௌனியாக இருந்து விட
வேண்டியதுதான்.

இன்றைக்கு நமக்கு எவ்வளவு கிடைக்கிறதோ அவ்வளவு சந்தோஷப் பட வேண்டும். இவ்வளவு கிடைக்க வேண்டியதே. இவ்வளவு கிடைக்கவில்லையே என்று அவருக்காக கொஞ்சம் ப்ரயத்னம், அதில் நாம் ஈச்வரனை விட்டு கொஞ்சம் தள்ளிப் போய்க் கொண்டிருக்கிறோம். ஈச்வரனை விட்டு கொஞ்சம் தள்ளிப் போய்க் கொண்டிருக்கிறோம் என்றால் மறுபடியும் ஒரு கேள்வி. ஈச்வரன் எல்லா இடத்திலும் இருக்கிறான், அவனை எப்படி நாம் தள்ளிப் போவோம். அப்படி

## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

அர்த்தம் இல்லை. ஈச்வரன் எல்லா இடத்திலேயும் இருக்கிறான். அந்த சாக்ஷாத்காரம் நமக்கு கிடைப்பதில்லை என்று நாம் வாயினால் சொல்கிறோமேயொழிய, வாஸ்த்தவமாக ஈச்வரன் எல்லா இடத்திலேயும் இருக்கிறார் என்கிற ஸ்திரபாவம் இருக்கிறதோ? யாருக்கும்- இல்லை. ப்ரஹ்லாதனுக்கு இருந்தது. அவனிடம் ஹிரண்யகசிபு எங்கேயடா உன்முடைய நாராயணன் இருக்கிறான் என்று கேட்ட போது, எங்கே இல்லை என்று சொல்கிறீர்கள் என்று கேட்டான். இந்த தூணிலே இருக்கானாடா? இருக்கிறான். இதை உடைக்கட்டுமா - உடைத்து விடுங்கள். உடைத்த உடனேயே பகவான் நரஸிம்ஹராக ஆகி விட்டார்.




அதனாலே நமக்கு ஈச்வரன் ஸர்வத்திலும் இருக்கிறான் என்கிற பாவம் ஸ்திரமாகனும். அது ஸ்திரமானால் அதுதான் ஈஸ்வர சாக்ஷாத்காரம். ஆனால் வியவஹாரத்திலேயே போய்க் கொண்டிருந்தால், அந்த பாவம் எப்படி ஸ்திரமாகும்? ஒருவன் நிந்தித்தாலும், ஒருவன் ஸ்துதித்தாலும், உபயத்திலே சமமாக இருக்க வேண்டும். மௌனி என்று சொன்னால், எப்பொழுதும் மௌனமாக இருக்க வேண்டும் என்கிற அர்த்தம் இல்லை. பகவத் விஷயமான பேச்சு தவிர வேறு பேச்சு வேண்டாம் என்று அர்த்தம். மௌனம் என்றால், எனக்கு வேண்டாத விஷயம் ஏதாவது பேச இருந்தால் அப்போது எனக்கு மௌனம். எனக்கு வேண்டிய விசயம் பேசினால் அப்போது நான் நன்றாகப் பேசுவேன் என்கிற மாதிரி இல்லை. பகவத் விசேஷமான அத்யந்த விஷயமான பேச்சு இருந்தால் பேசுவோம். இல்லை மௌனமாக இருப்போம்.

ஸத் ஸம்ப்ரதாயம்
An Unit of the e magazine Voice of Jagadguru)

# இறைவனின் செயல்களில் குறையில்லை

ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள்

கதை 1



சாலையோரத்தில் நடந்து சென்று கொண்டிருந்த ஒருவன் ஒரு மெல்லிய பரங்கிக் கொடியைப் பார்த்தான். "இந்த மெல்லிய கொடிக்கு இவ்வளவு பெரிய பழத்தைக் கொடுத்த இறைவன் எவ்வளவு கொடூரமானவனாக இருக்க வேண்டும்?" என்று அவன் நினைத்துக் கொண்டான். அவன் மேற்கொண்டு நடந்து செல்லும்போது, ஒரு வேப்ப மரத்தைப் பார்த்தான். அதனடியில் சிறிது நேரம் இளைப்பாறினான் அவன். அதன் சிறிய பழத்தைப் பார்த்ததும் அவன், 'உண்மையில் இறைவன் பைத்தியமாகத்தான் இருக்க வேண்டும். இந்தப் பெரிய மரத்திற்கு இவ்வளவு சிறிய பழத்தைக் கொடுத்திருக்கிறானே' என்று நினைத்தான். அவன் அவ்வாறு சிந்திப்பதற்குள் ஒரு வேப்பம்பழம் அவன் கண் இமையின் மேல் விழுந்தது. சிறியதாக இருந்த காரணத்தால், அது அவனுக்கு லேசான வலியைத்தான் உண்டாக்கியது. உடனே அவன் தன் தவறை உணர்ந்து, 'நன்கு யோசிக்காமல் நான் இறைவனை நிந்தித்துவிட்டேன். இறைவன் இந்த மரத்திற்கு பெரிய பரங்கிக்காயைக் கொடுத்திருந்தால் என் நிலைமை இப்பொழுது என்னவாகியிருக்கும்? இந்த மரத்திற்கு ஒரு சிறிய பழத்தையும், அந்த மெல்லிய கொடிக்கு பெரிய பரங்கிக் காயையும் கொடுத்ததாலேதான் நான் இந்த சிறிய வலியோடு தப்பித்தேன்" என்று எண்ணினான்.


கதை 2

ஓர் இராஜாவிற்கு மிகவும் பக்தியுள்ள ஒரு மந்திரி இருந்தான். அவன் எப்பொழுதும், 'இறைவன் செய்வது எல்லாமே நமது நன்மைக்கே" என்று

## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

சொல்லிக் கொண்டே இருப்பான். ஒரு நாள் இராஜா, ஏதோ வேலையில் ஈடுபட்டிருக்கும்போது தனது கைவிரலை வெட்டிக்கொண்டு விட்டதால், வலியால் மிகவும் துடித்துப் போனான். அப்பொழுது இராஜா மந்திரியை வரவழைத்து, "இதுவும் என் நன்மைக்குத்தான் என்றா சொல்கிறாய்?" என்று கேட்டான். அதற்கு மந்திரி, "ஆமாம்" என்று கூறினான். இதைக் கேட்டுக் கோபமடைந்த அரசன் மந்திரியைச் சிறையில் அடைத்தான்.



மறுநாள் இராஜா வேட்டையாடச் சென்றான். தனது பரிவாரங்களிடமிருந்து விலகி வெகு தூரம் பிரிந்து வந்து விட்டதால். இராஜா காட்டில் வழி தவறிச் சென்றுவிட்டான். அப்பொழுது வழியில் பயங்கரமான சில காட்டுவாசிகளை இராஜா சந்திக்க நேர்ந்தது. அவர்கள், தாங்கள் வழிபடும் வனதேவதைக்குப் பலியிடுவதற்காக ஒருவனைத் தேடிக் கொண்டிருந்தார்கள். இராஜாவைப் பார்த்ததும், உடனே அவர்கள் அவனைச் சிறைப்படுத்தி தங்கள் பூஜாரியிடம் கொண்டு சென்றார்கள். அரசனை நன்கு பரிசோதித்துப் பார்த்த அந்தப் பூஜாரி, "இவன் பலியிடுவதற்குத் தகுந்தவன் அல்ல. இவன் கையில் ஒரு விரல் இல்லை. எவ்வித குறைபாடும் இல்லாத முழுமையான ஒருவனைத்தான் நாம் நம் தேவதைக்குப் பலியிட வேண்டும்" என்று குறிப்பிட்டான். உடனே அந்தக் காட்டுவாசிகள் இராஜாவை விடுவித்துவிட்டார்கள். தப்பித்தோம், பிழைத்தோம் என்றெண்ணி அவன் தன் அரண்மனைக்கு வந்து சேர்ந்தான்.

அப்பொழுது அவனுக்கு, மந்திரியை தான் அநியாயமாகச் சிறையில் அடைத்தது ஞாபகத்திற்கு வந்தது. தனது விரலை இழந்து கூட தனது நன்மைக்குத்தான் என்று கூறிய மந்திரியின் வார்த்தைகளை எண்ணிப் பார்த்தான் அவன். விரலை இழந்ததால்தானே தான் உயிர் பிழைக்க முடிந்தது என்று

நினைத்து இராஜா மந்திரியைச் சிறையிலிருந்து விடுதலை செய்தான். பிறகு அவனிடத்தில் மன்னிப்பும் கேட்டுக் கொண்டான். சிறிது நேரம் சிந்தனையில் ஆழந்த அரசன் மந்திரியைப் பார்த்து, 'அது சரி! நான் உன்னைச் சிறையில் அடைத்தேனே, அதுவும் உனது நன்மைக்காகத்தான் இறைவன் அவ்வாறு என்னை செய்ய வைத்தார் என்று கூறுகிறாயா?" என்று கேட்டான். அதற்கும், "ஆமாம்" என்று பதிலளித்தான் மந்திரி. பிறகு, "நான் சிறையில்



அடைக்கப்படாமலிருந்தால் அந்தக் காட்டில் நான் உங்கள் அருகில் இருந்திருப்பேன். என் உடலில் எவ்விதக் குறையும் இல்லாததால் அந்தக் காட்டுவாசிகள் என்னைப் பலியிட்டிருப்பார்கள்" என்று கூறினான் மந்திரி.

ஒருவன் முழு நம்பிக்கையுடன் ஆராய்ந்து பார்த்தானே யானால், இறைவனுடைய படைப்பில் எவ்விதக் குற்றமும் இல்லை என்பதையும், அவருடைய செயல்கள் யாவுமே நமது நன்மைக்குத்தான் என்பதையும் நன்கு உணர்ந்துகொள்ள முடியும்.

(நன்றி : அறிவூட்டும் சிறுகதைகள்...)

ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)



ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள்,
ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள்
அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறோம்